உ

225

ஓம் குஹாயநம:

# திருப்புகழமிர்தம்

"குருப்புகழை மேவுகின்ற கொற்றவன் ருள்போற்றுந்
திருப்புகழைக் கேளீர் தினம்"

மலர் 18 | விஜய ஆண்டு மார்கழித் திங்கள் டிசம்பர்-1953 | இதழ் 9

## திருப்புகழ்

### பொது

நீருநில மண்டாத தாமரைப டர்ந்தோடி
நீளமக லஞ்சோதி வடிவான
நேசமல ரும்பூவை மாதின்மண மும்போல
நேர்மருவி யுண்காத லுடன்மேவிச்
சூரியனு டன்சோம னீமுலிவை யண்டாத
சோதிமரு வும்பூமி யவையூடே
தோகைமயி லின்பாக னுமெனம கிழ்ந்தாட
சோதிஅயி லுந்தாரு மருள்வாயே
வாரியகி லங்கூச ஆயிரப ணஞ்சேடன்
வாய்விடவொ டென்பாலு முடுபோல
வார்மணியு திர்ந்தோட வேகவினி றைந்தாட
மாமயில்வி டுஞ்சேவல் கொடியோனே
ஆரியன வன்தாதை தேடியின மும்பாடு
மாடலரு ணஞ்சோதி யருள்பாலா
ஆனைமுக வன்தேடி யோடியெய ணங்காத
லாசைமந வுஞ்சோதி பெருமாளே.

18-33

## பதவுரை

வாரி அகிலம் கூச—கடல்கள் எல்லாம் அஞ்சவும், ஆயிர பணம் சேடன் வாய்விட ஓட—ஆயிரம் பணமகுடங்களையுடைய ஆதிசேடன் வாயைப் பிளந்து ஓடவும், எண்பாலும் உடுபோல வார்மணி உதிர்ந்து ஓட—அவனுடைய பணமகுடத்தில் உள்ள நீண்ட நாகரத்தினங்கள் எட்டுத்திசைகளிலும் நட்சத்திரங்களைப்போல் சிந்திச் சிதறவும், (ஏ-அசை) கவின் நிறைந்து ஆட—அழகு நிறைந்த நடனஞ்செய்யும் படி, மாமயில் விடும்—பெருமை மிக்க மயிலை ஏவுகின்ற, சேவல் கொடியோனே — சேவலங்கொடியையுடையவரே! ஆரியன் — பிரம தேவர், அவன் தாதை—அவருடைய பிதாவாகிய திருமால், தேடி இனமும்பாடும்—அடிமுடிகளைத்தேடி இன்னமும் துதித்து பணிகின்ற, ஆடல் அருணம் சோதி அருள்பாலா—ஆடலையுடைய சிவந்த சோதி வடிவாக விளங்கும் சிவபெருமான் அருளிய குமாரரே! ஆனைமுகவன் தேடி ஓடியே—ஆனைமுகத்தையுடைய தாரகாசுரன் போர்க்களத்தில் தேடியும் ஓடியும், அணங்கு ஆதல்—வருத்தத்தையடைந்து முடிவு பெறுதலை, ஆசை மருவும் சோதி—விரும்புகின்ற சோதிமயமான, பெருமாளே—பெருமையின் மிக்கவரே! நீரும் நிலம் அண்டாத—மண்ணும் தண்ணீரும் கலவாத, தாமரை படர்ந்து ஓடி—தாமரைக்கொடி படர்ந்து செல்ல, நீளம் அகலம் சோதி வடிவு ஆன—நீளமும் அகலமும் உடைய ஒளிவடிவாக விளங்கும், நேச மலரும் பூவை—அன்பு விரிகின்ற இதயமலரை, மாது இன் மணமும்போல நேர்மருவி—அழகும் இனிய வாசனையும் போல கலந்து, உண் காதலுடன் மேவி—உள்ளத்தை உண்ணுகின்ற காதலோடு அடைந்து, சூரியனுடன் சோமன் நீழல் இவை அண்டாத—சூரியனுடைய வெய்யில் சந்திரனுடைய சீத கிரணம் என்ற இந்த இரண்டும் பொருந்தாததும், சோதிமருவும்—ஞானஒளியுடன் விளங்குவதுமாகிய, பூமி அவையூடே—சஹஸ்ராரம் ஆகிய பேரம்பலமாகிய அத்தலத்திலே, தோகைமயிலின் பாகனும் என மகிழ்ந்து ஆட—தோகையையுடைய மயில்போன்ற உமையை ஒரு பாகத்தில் கொண்ட நடராஜமூர்த்தியைப்போல் இன்புற்று நிருத்தம் புரிய, சோதி அயிலும் தாரும் அருள்வாயே—ஒளிமிக்க வேலையும் உமது மார்பில் தரித்த திருமாலையையும் தந்து அருள்புரிவீர்.

## பொழிப்புரை

கடல்கள் முழுவதும் அஞ்சவும், ஆயிரந் தலைகளையுடைய ஆதிசேடன் வாயைப் பிளந்து ஓடவும், அவனுடைய பணமகுடத்தில் உள்ள நாகமணிகள் நட்சத்திரங்களைப்போல் உதிர்ந்து எட்டுத் திசைகளில் ஓடவும் பெருமையுடைய மயிலை அழகு நிறைந்து ஆடும்படி விடுகின்ற சேவற் கொடியினரே! நான்முகக் கடவுளும் அவருடைய பிதாவாகிய நாராயணரும் இன்னமும் தேடித் துதிக்கின்ற, ஆடலரசாகிய சிவந்த சோதியின் திருக்

குமாரரே! ஆனைமுகமுடைய தாரகாசுரன் போரில் தேடியும் ஓடியும் வருந்தி மாள்வதை விரும்பிச்செய்த சோதிமயமான பெருமிதத்தையுடையவரே! மண்ணும் தண்ணீரும் பொருந்தாத தாமரைக்கொடி படர்ந்துசென்று நீளமும் அகலமும் உடையதாய் ஒளிவடிவாய் அன்புவிரியும் இதயமலரை அழகும் இனிய மணமும்போல் அதனுடன் கலந்து உள்ளத்தைக் கவர்கின்ற காதலுடன் அடைந்து, சூரிய சந்திரர்களுடைய வெய்யிலும் நிலவும் சேராத ஒளியுடன் கூடி விளங்குகின்ற சஹஸ்ராரம் என்ற பேரம்பலத்தினிடையே உமையொருபாகராகிய நடராஜமூர்த்தியைப்போல் நடனஞ்செய்து இன்புறுமாறு அடியேனுக்கு வேலையும் மலர் மாலையையும் தந்து அருள்புரிவீர்.

## விரிவுரை

**நீருநிலமண்டாத தாமரை:—**

தாமரை மண்ணில் தண்ணீரின் தொடர்புடன் முளைப்பது. இங்கே தண்ணீரும் மண்ணும் சம்பந்தப்படாத தாமரைக்கொடி என்பது மூலாதாரத்தில் இருந்து முளைத்தெழுகின்ற சுழுமுனையைக் குறிக்கின்றது. அது தாமரைக்கொடிபோல் வளைந்து வளைந்து மேல்நோக்கிச் செல்கின்றது.

**நீளமகலஞ் சோதி வடிவான நேசமலரும்பூ:—**

பூ—இதயமலர். இதயபுண்டரீகமலர். அப் புண்டரீகமலர் மீது ஒரு மின்னொளி வடிவாக இடையறாது ஒரு பரம்பொருள் திருநடனம்புரிந்து கொண்டிருக்கின்றது.

**மாதின் மணமும் போல நேர்மருவி உண் காதலுடன் மேவி:–**

மாது—அழகு. அழகும் இனிய மணமும்போல் அப் பரம்பொருளைச் சார்ந்து அருட்காதலுடன் அதனுடன் இரண்டறக் கலந்து நிற்கவேண்டும்.

"அன்னியம் இன்மையின் அரன்கழல் செலுமே" என்ற சிவஞானபோத எட்டாவது சூத்திரத்தின்படி அதனுடன் அனன்யம் பெற்று திருவடியில் ஆன்மா அடங்கி நிற்கும். அவ்வாறு நின்ற ஆன்மா பாசநீக்கம் பெற்று பரமானந்த மெய்தி பாவனாதீத நிலையில் நிற்கும்.

> அவனேதானே ஆகிய அந்நெறி
> ஏகனாகி யிறைபணி நிற்க
> மலமாயை தன்னொடு வல்வினையின்றே.
>
> —சிவஞானபோதம் 9-ம் சூத்திரம்.

**சூரியனுடன் சோம னீழலிவையண்டாத**
**சோதிமருவும் பூமி அவையூடே:—**

அவை—சபை. அது சஹஸ்ராரமாகிய பேரம்பலம்.

இதயாகாயம்—சிற்றம்பலம்
சஹஸ்ராரம்—பேரம்பலம்

சஹஸ்ராரம் என்பதைத் திருக்கோயில்களில் ஆயிரக்கால் மண்டபம் உணர்த்துகின்றது.

சஹஸ்ராரமாகிய மேலைப்பெருவெளியில் சூரியசந்திரர்களுடைய வெய்யிலும் நிலவும் இல்லை. ஆனால் அங்கு இடையருத ஒரு பேரொளி விளங்கிக்கொண்டிருக்கும்.

இடையருத சிவயோகசாதனை செய்து சஹஸ்ரார சித்தி பெற்றூர்களே அதனை அறிவார்கள்.

"வானிந்து கதிரிலாத நாடண்டி" என்று பழநித் திருப்புகழில் இதே கருத்தை அடிகளார் கூறியிருக்கின்றூர்.

**தோகைமயிலின் பாகனுமென மகிழ்ந்தாட:—**

தோகைமயில்—தோகைமயில்போன்ற உமையம்மையார். உவமையாகு பெயர்.

இனி மயிலாக இருந்து சிவபெருமானைப் பூசித்தவர் என்றும் பொருள்படும். அம்பிகை மயிலுருவுடன் வழிபட்ட திருத்தலம் மயிலாப்பூர்.

உமையம்மையாரை ஒருபாகத்தில் கொண்ட நடராஜமூர்த்தியைப்போல் அடியேனும் நடனம்புரிந்து 'இன்புறவேண்டும் என்று வேண்டுகின்றூர். ஆடுவது மகிழ்ச்சியினுல்விளையும் மெய்ப்பாடு. துன்பநீக்கமும் இன்பஆக்கமும் பெற்ற ஆன்மா இன்ப நடம் புரியும்.

**சோதி அயிலும் தாரும் அருள்வாயே:—**

அயில்—கூர்மை. அது பண்பாகு பெயராக வேலாயுதத்தைக் குறிக்கின்றது. வேலை எனக்கு அருள்புரியும் என்பதன் உட்பொருள், வேல் பரிபூரண ஞானமாதலின் ஞானத்தை யருள் புரியும் என்பதாகும். காதல்கொண்ட தலைவி காதலனுடைய மலர்மாலையை விரும்புவாள். இங்கே அருட்காதல்கொண்ட பக்குவம் உள்ள ஆன்மா முருகவேளுடைய மலர்மாலையை விரும்புகின்றது.

"மால்கொண்டபேதைக்குன் மணநாறும்
மார்தங்கு தாரைத்தந் தருள்வாயே"
—திருப்புகழ்.

**வாரியகிலங்கூச:—**

மயில் ஆடுகின்றபோது ஏழு சமுத்திரங்களும் அஞ்சின.

அகிலம்—எல்லாம். சமுத்திரங்கள் யாவும் அஞ்சின.

குசை நெகிழா வெற்றி வேலோன் அவுணர் குடர் குழம்பக்
கசையிடுவாசி விசைகொண்ட வாகனப் பீலியின் கொத்
தசைபடு கால்பட் டசைந்தது மேரு அடியிட எண்
திசைவரை தூள்பட்ட அத்தூளின்வாரி திடர்பட்டதே.

என்ற கந்தரலங்காரப்பாடலினால் மயிலின் பெருமையையறிக. இப்பாடலுக்கு நான் எழுதிய கந்தரலங்கார உரையைப் படித்து இன்புறுக.

**ஆயிரபணஞ்சேடன் வாய்விட ஓட:—**

ஆயிரம் பணமகுடங்களையுடைய ஆதிசேடன் மயிலின் நடனத்தைக் கண்டு அஞ்சி தனது வாய்களைப் பிளக்கவும், பயந்து ஓடவும் செய்தான். விடவும் ஓடவும் எனவிரிக்க. உம்மைத் தொகையாக நின்றது.

**எண்பாலும் வார்மணி உதிர்ந்தோடவே:—**

ஆதிசேடனுடைய பணமகுடங்களில் உள்ள நீண்ட நாக ரத்தின மணிகள் உதிர்ந்து எட்டுத்திக்குகளிலும் சிந்தி ஓடின. மணிகள் உதிர்கின்ற அளவில் அஞ்சி சேடன் ஓடினான் என்று குறிப்பிடுகின்றார்.

**கவின் நிறைந்த மாமயில் விடும் சேவற் கொடியோனே:—**

மயிலை ஆடவிடுகின்ற சேவலனே! என்று பொருள்கொள்க. மயில் என்ற இடத்தில் இரண்டாம் வேற்றுமை தொக்கிநிற்கின்றது. எனவே "மயில் விடும்" என்பதற்கு "மயிலை விடும்" என்று பொருள் செய்யப்பெற்றது.

உலகம் இன்புறும்பொருட்டு நாத தத்துவத்தினின்றும் சுத்தமாயையை கலக்கி அதினின்றும் ஏனைய தத்துவத்தை இறைவன் உண்டாக்குகின்றான்.

இந்த உட் பொருளை விளக்கவே முருகவேள் மயிலை நடனஞ் செய்ய விடுகின்றார் என்று அடிகளார் குறிப்பிடுகின்றார்.

**சேவல் கொடியோனே:—**

சேவல்—நாததத்துவம். மயில் விந்துதத்துவம். நாத தத்துவத்தை யுடையவன் முருகன்.

சிவதத்துவம் ஐந்து என உணர்க.

நாதம், விந்து, சாதாக்கியம், ஈசுவரம், சுத்த வித்தை.

(1) **நாதம்:—** இது ஞானமயமானது. இதினின்றும் விந்து பிறக்கின்றது.

(2) **விந்து:—** இது கிரியை மயமானது. இதினின்றும் சாதாக்கியம் பிறக்கின்றது.

சதா ஐக்கியம் சாதாக்கியம்.

(3) **சாதாக்கியம்:—** இது ஞானமும் கிரியையும் சமமாக வுடையது.

அதாவது நாதவிந்து தத்துவங்கள் சமமாகக் கூடி நிற்பது.

முதலில் ஞானம்; பிறகு கிரியை; பிறகு இரண்டும் கலந்தது. இதினின்றும் ஈசுவரதத்துவம் பிறந்தது.

(4) **ஈசுவரம்:—** இது ஞானம் குறைந்து கிரியை அதிகமானது.

இதினின்றும் சுத்த வித்தை என்ற தத்துவம் பிறந்தது.

(5) **சுத்த வித்தை:—** இது ஞானம் மிகுந்து கிரியை குறைந்து நிற்பது.

மயில் ஆடுவதனாலும் சேவல் கூவுவதனாலும் சிவ தத்துவங்கள் விளக்கமுற்று அதனால் வித்யா தத்துவங்ளும், ஆன்ம தத்துவங்களும் தொழிற்படுகின்றன என வுணர்க.

**ஆரியனவன் தாதை தேடினமும்பாடு மாடலருணஞ் சோதி யருள் பாலா:—**

மாலும் அயனுங் காணாத சோதிவடிவாய் நின்ற சிவமூர்த்தியின் திருக்குமாரர் முருகவேள்.

பிரமன்— ராஜச குணம்.

திருமால்—தாமத குணம்.

இந்த இரு குணங்களாலும் இறைவனை யடைய முடியாது.

**ஆடலருணஞ்சோதி:—**

அருணம்—சிவப்பு.

இறைவர் சிவந்த ஜோதிவடிவானவர். அது கருணை நிறைந்த ஜோதி என்க.

"அருட்ஜோதி" அருள்மயமானது
"சுயஞ்சோதி" தானே விளங்குவது.
"பரஞ்சோதி" பெரிய பொருளாக விளங்குவது
"சிவஜோதி" மங்கலத்தைச் செய்வது
"ஞான ஜோதி" அறிவின் வடிவாகியது

"ஏம ஜோதி" இன்பத்தை வழங்குவது

"வாமஜோதி" அழகியது

"நடன ஜோதி" எப்போதும் அசைந்துகொண்டிருப்பது

இவ்வாறு பற்பல நாமங்களையுங் கொண்டது ஜோதி என்க.

ஆனைமுகவன் தேடி ஓடியே அணங்காதல்:—

ஆனைமுகவன்—தாரகாசுரன்.

அவன் போர் எங்கே என்று தேடிவருபவன். தேவர்கட்குப் பெருந்துயர் செய்தவன்; மாயையில் வல்லவன்.

அணங்கு — வருத்தம்.

அவன் வருத்தத்தை யடைதலை அடியவர்களாகிய அமரர் பொருட்டு ஆறுமுகப் பெருமான் புரிந்தனர்.

## கருத்துரை

**மயிலையுடையவரே! சேவற்கொடியினரே! சிவ குமாரரே! தாரகாரியே! இதயகமலத்தையுற்று சிவ யோக நெறியில் சஹஸ்ரார சித்தி பெற ஞானத்தை யருள்புரிவீர்.**

---

## ஸௌராஷ்ட்ர நீதிஸம்பு

120. ஜீவர்கள் பிரார்த்தனை செய்து கேட்காதவரை கடவுளாக ஏதும் கொடுப்பதில்லை. குழந்தை அழுதால் தானே தாய் பாலைக் கொடுக்கின்றாள்? தட்டினால் தானே மக்கள் கதவைத் திறக்கின்றார்கள்? எப்படி சூடான பால் கிடைக்கும்? (காய்ச்சினால் தான் கிடைக்கும்).

121. வெகுதூரத்தில் இருக்கும் மலரின் வாசனை அறியும் வண்டுபோல் விவேகிகள் வெகுதூரத்தில் இருக்கும் அலுவல்களை ஆராய்ந்து அறிந்து கிரமமாக செய்து முடிப்பார். ஆனால் அவிவேகிகள் சமீபத்தில் இருக்கும் அலுவல்களைக் கூட செய்யாமல் தவளை மாதிரி விழித்துப் பார்த்துக் கொண்டேயிருப்பார்கள்.

122. அடர்த்தியான இலை கிளைகளினால் விஸ்தாரமாக நிழல் கொடுக்கும் பெருத்த மரத்தின் கீழ் வந்து உட்கார வேண்டும். ஆனால் அம்மரத்தில் பழங்கள் உற்பத்தி இல்லை என்ற காரணத்தால் அம்மரத்தின் நிழலை வேண்டாம் என்று யார் சொல்வார்கள்?

உ

திருச்சிற்றம்பலம்

# பெரிய புராணம்

## பொய்யடிமை யில்லாத புலவர் புராணம்

"பொய்யடிமை யில்லாத புலவர்க்குமடியேன்''

பொய்யடிமையில்லாதபுலவர்கள் கைலைமேவுங்கடவுளுக்கே ஆளானவர்கள்; செய்யுள்களிற்பயிலும் சொற்களுக்கு நன்கு தெளிவாகப் பொருள் செய்வார்கள். கற்றவர்க்குத் தாம் வரம்பாக விளங்குவார்கள். நூல் பல கற்ற நுண்ணிய மதி நலம் படைத்தவர்கள். ஐயம் நீங்கிய மெய்யுணர்வு பெற்றவர்கள். சிவமூர்த்தியையன்றி வேறு ஒரு பொருளைப் பெரிதாக நினைத்து உரையாதவர்கள். மெய்மையாக சிவனடிக்கே தொண்டு பூண்டவர்கள். திருவருள் நெறிநின்று பெருமை பெற்ற அவர்கள் பெருமை அளவிடற்கரியது.

### விளக்கம்

**பொய்யடிமை யில்லாத புலவர்**

இவர்கள் பொது அடியார்கள். புலம்—அறிவு. அறிவு நிறைந்தவர்கள் புலவர்கள். அறிவின் பயன் பேரறிவுடைய பரம்பொருளுக்கு அடிமையாவதே யாகும்.

> கற்றதனால் ஆயபயன் என்கொல் வாலறிவன்
> நற்றாள் தொழாஅ ரெனின். —தமிழ்மறை.

மெய்யன்புடன் இறைவனுக்கு அடிமைபூண்டு பதிநூல்களை ஓதி உணர்ந்து உருகி ஒருமைப்பட்டு நிற்பவர்கள்.

> பொற்பமைந்த அரவாரும் புரிசடையார் தமையல்லால்
> சொற்பதங்கள் வாய்திறவாத் தொண்டுநெறித் தலைநின்ற
> பெற்றியினில் மெய்யடிமையுடையராம் பெரும்புலவர்
> மற்றவர்தம் பெருமையார் அறிந்துரைக்க வல்லார்கள்.

என்று சேக்கிழாரடிகள் கூறும் கனியமுதன்ன இனிய பாடலால் அறிக.

---

## புகழ்ச்சோழ நாயனார் புராணம்

"பொழிற் கருவூர்த் துஞ்சிய புகழ்ச்சோழற்கடியேன்"

இமயமாமலையில் தமது புலிக்கொடியை எழுதி, தண்ணிய வெண்கொற்றக் குடையின்கீழ் உலகத்தையாளும் விரிந்த புகழும் பரிந்த உளமும் படைத்த சோழமன்னர்களுடைய வளநாட்டின் தலைநகரமாகத் திகழ்வது **உறையூர்** எனப்படும். எல்லா

வளங்களும் உறையும் உறையூரில் சதா மணிவிளக்குகள் பல எரிவதனால் இரவு இல்லையாயிற்று. செல்வமிகுதியால் இரவும் இல்லையாயிற்று. அழகிய பல ஆவணவீதிகள், மதம்பொழியும் யானைகள் பலவுடைய சாலைகள், கடல்போன்ற குதிரைகளையுடைய கூடங்கள், ஆழ்ந்த அகழிகள், உயர்ந்த மதில்கள், கோபுரங்கள், மலர்ச்சோலைகள், மேகந்தவழ்கின்ற காவனங்கள், சந்திர சூரியர் தவழ்கின்ற உயர்ந்த கோபுரங்கள், தேருலாவு நெடுந்தெருக்கள், முதலிய பல நலங்கள் நிறைந்திருந்தன. தில்லையில் எல்லையில்லாத திருப்பணிகள் செய்த அநபாய மன்னர் பெருமானுடைய திருக்குலத்தில் மூதாதையாகிய **புகழ்ச்சோழ நாயனார்** அந்நகரில் அரியணைமீது வீற்றிருந்து அறநெறி வழுவாது அரசு புரிந்து வந்தார். மணிமுடி வேந்தர்கள் பணிபுரிய வெற்றிமாலை புனைந்து நிலமகளுக்குக் கணவராகப் பெரும்புகழுடன் அவர் வாழ்ந்தார்.

பிறைமுடித்த பெருமானாருடைய திருக்கோயில்கள் முழுவதும் நித்திய நைமித்திகபூசனைகள் சிறப்பாக நிகழும்படிச் செய்தார். அடியார்கள் வேண்டுவ அனைத்தும் வழங்கி திருநீற்றின் திறத்தைப் போற்றிவந்தார். மேன்மைகொள் சைவநீதியை உலகமெங்கும் பரப்பினார்.

இவ்வாறு இனிது வாழ்கின்ற புகழ்ச் சோழனார் மேல் திசையில் கொங்கநாட்டு வேந்தர்களும் ஏனோரும் தரும் கப்பங்களைக் காணும்பொருட்டு, தங்கட்கு உரிமைவாய்ந்த தலைநகரங்களில் ஒன்றாகிய **கருவூரைத்** தம் சுற்றஞ்சூழ அடைந்து, இந்திரன் அமராவதியடைவதுபோல் அந்நகருள் நுழைந்து ஆனிலையென்ற திருக்கோயிலுக்குள் சென்று பசுபதீச்சுரரைப் பலகாலும் பணிந்து பரவசமடைந்தார்.

பின்னே கருவூரில் உள்ள தமது அரண்மனையடைந்து அம்மாளிகைக்கு முன் அமைத்துள்ள அத்தாணிமண்டபத்துள் அரியணைமீது வீற்றிருந்தார். மேற்றிசை நாட்டு வேந்தர்கள் கொணர்ந்த யானைகள் குதிரைகள் பொன்மணிகள் முதலிய திறைப்பொருள்களையெல்லாங் கண்டனர். திறை கொணர்ந்த மன்னர்கட்கு அவரவர்கள் நிலைமைக்குத் தக்க செயல் உரிமைகளைத் தந்து உபசரித்தார்.

“நமது அரசாட்சிக்கு அடங்காது மாறுபட்ட அரசர்கள் இருப்பார்களாயின் அவர்கள் இன்னார் என்று தெரிந்துரைப்பீர்” என்று அமைச்சர்களை நோக்கி கட்டளையிட்டு புகழ்ச்சோழர் அங்கு இருந்தனர்.

சென்று சிவகாமியார் கொணர்திருப்பள் ளித்தாமம்
அன்று சிதறுங் களிற்றை அறஎறிந்து பாகரையும்
கொன்ற எறி பத்தரெதிர் என்னையுங்கொன் றருளுமென
வென்றிவடி வாள்கொடுத்துத் திருத்தொண்டின் மிகச்சிறந்தார்.

கருவூரில் வாழ்கின்ற சிவகாமியாண்டார் என்ற ஒரு சிவனடியார் வழக்கம்போலே மலர் பறித்துப் பூங்கூடையில் நிரப்பித் திருக்கோயிலுக்குக் கொண்டுபோக, அரசருடைய பட்டவர்த்தனமென்ற யானை அக்கூடையைப் பறித்து மலர்களைக் கீழே சிந்தின. அதுகண்ட சிவகாமியாண்டார் அந்தோ என்று முறையிட்டனர். ஆங்கு வந்த எறிபத்தநாயனர் யானையையும் பாகரையும் கொன்று வீழ்த்தினர். அது கேட்ட புகழ்ச் சோழர் ஓடிவந்து "யானை செய்த குற்றம் அடியேனையும் சாரும்; ஆகவே என்னையும் கொல்லும்" என்று உறைவாளை அவரிடம் கொடுத்து பணிந்து நின்ருர். அவர் அவ்வாளை வாங்கி தன்னையே மாய்க்க முயன்றபோது இறைவன் திருவருள் வெளிப்பட்டு யானை உயிர்பெற்றெழுந்தது. இத்தகைய அருட்பெருஞ்செல்வராக புகழ்ச்சோழநாயனர் பொலிவுடன் விளங்கினர்.

அமைச்சர் அரசரை வணங்கி, "ஆண்டகையே! முறையே திறைகொடாத அரசன் ஒருவன் இருக்கின்ருன்" என்று கூறினர்கள். அதுகேட்ட அண்ணலார் அதிசயத்தார். புன் முறுவல் பூத்தார். "அவ்வாறு கப்பங் கட்டாதவன் யாவன்?" என்று வினவினர். அமைச்சர்கள், "அரசரேறே! அவன்பேர் அதிகன்; அண்மையில் மலையாணுடையவனக மதில்சூழ்ந்த காவல்மிக்க கடிநகரில் உறைகின்ருர்" என்ருர்கள். மன்னர் பெருமானர், "அஞ்சாநெஞ்சுடைய உமக்கு எதிர் நிற்கும் அரணும் உளதோ? நால்வகைச் சேனைகளுடன் சென்று அந்த அரணைப் பொடிபடுத்திவாருங்கள்" என்று பணித்தருளினர்.

மன்னவனர் ஆணையைச் சென்னிமிசைத்தாங்கிய மந்திரிமார்கள் சேனைபதிகளுடன் நால்வகைச் சேனைகள் புடைசூழச் சென்று அதிகர்கோன் நகரை வளைத்துக் கடும் போர் புரிந்தார்கள். அதிகனுடைய சேனைகளும் எதிர்த்து அமர்புரிந்தன. தேருடன் தேர்களும் யானைகளுடன் யானைகளும் புரவிகளுடன் புரவிகளும் காலாட்களுடன் காலாட்களுமாக எதிர்த்து வீரயுத்தம் புரிந்தன. எங்கும் உதிரவெள்ளம் ஓடியது. பிணமலை குவிந்தது. காக்கைகளும் கழுகுகளும் பருந்துகளும் பரந்து பசிய நிணங்களையுண்டு பசியாறின. வாள் தண்டு இருப்புலக்கை முசலம் ஈட்டி சக்கரம் சுரிகை சூலம் பாசம் முதலிய ஆயுதங்கள் வானிடை மின்னலைப்போல் ஒளிவீசின.

இவ்வாறு இருதிறத்துச் சேனைகளும் கண்டார் கண்கள் துணுக்குறுமாறு கடுஞ்சமர் விளைத்தன. இறுதியில் அதிகனுடைய சேனைகள் உறுதியிழந்து மாண்டன. அவனுடைய மலையரண் துகள்பட்டன. அவன் ஓடிக் காட்டில் ஒளிந்தான். சோழனுடைய சேனைவீரர்கள் வெற்றிபெற்று அதிகனுடைய நவநிதிகளையும் மாண்ட வீரர்களது தலைகளையும் எடுத்துக் கொண்டு கருவூரையடைந்தார்கள். மன்னவன் முன் அவைகளைக்கொணர்ந்துகுவித்தனர். மன்னவனர் அவைகளைக்கண்டு

தனது சேனைவீரர்களது போர்த்திறத்தை தமெச்சிப் புகழ்ந்து மகிழ்ந்தருளினர். அத்தலைகளைக் கண்ணுற்றபோது அவை களின் நடுவே ஒருதலையில் சடைமுடியிருக்கக்கண்டார்.

கண்டபொழுதே நடுங்கி மனங்கலங்கிக் கைதொழுது
கொண்டபெரும் பயத்தினுடன் குறித்தெதிர்சென் றதுகொணர்ந்த
திண்டிறலோன் கைத்தலையில் சடைதெரியப் பார்த்தருளிப்
புண்டரிகத் திருக்கண்ணீர் பொழிந்திழியப் புரவலனர்.

மனம் நடுங்கினர். விண்ணருவியெனக் கண்ணருவி பொழியக் கருத்தழிந்தார். அந்தோ கெட்டேன் என்று அலறி னர். "நான் திருநீற்றின் நெறியைக்காத்து அரசளித்த தன்மை சாலஅழகிது. சடைமுடியுடைய ஒரு சிவனடியார் தலையைக் கண்டும் என் இதயம் வெடிக்காமல் இருக்கின்றதே. இனி அடியேன் உலகங்காத்து உயிர்காத்து வாழலாமோ? சிவபெரு மானே! தேவதேவா! கருணைக்கடலே!பழிக்கும் பாவத்துக்கும் ஆளானேன். இனி எனக்கு இவ்வுலகில் செயல்இல்லை" என்று புலம்பினர்.

மதிமந்திரிகளை நோக்கி, "நீங்கள் இந்த அரசாட்சியை அறநெறிகடவாது ஆண்டு உரியகாலத்தில் என்புதல்வனுக்கு முடிசூட்டுவீர்களாக" என்று கட்டளையிட்டருளினர். அதைக் கேட்ட அமைச்சர்கள் அந்தோ! இது என்னசெயல்? என்று கூறிக் கதறிப்பதறினர். "மதிநலமிக்க மந்திரிமார்களே! மனங் கலங்கவேண்டாம். இனி எனக்கு இவ்வுலகில் வாழ்வு இல்லை. கடமையை நீங்கள் தவருது செய்யுங்கள்" என்று கழறினர். அங்கே விறகுகளையிட்டு பெருந்தீ வளர்ப்பித்தார். உடம்பு முழுவதுந் திருநீறு பூசிக்கொண்டார். சடையுடை சிரத்தை ஒரு பொற்றட்டில் ஏந்தி தமது முடிமிசைஏந்தினர். ஐந்தெழுத்தை ஓதிக்கொண்டு அந்த அழற்குண்டத்தை வலம்வந்தார். தாமரைப்பொய்கையில் குளிப்பார்போல் மகிழ்ச்சியுடன் நெருப் பிடை புகுந்தார். மலர்மழை சிந்தியது. வானில் தேவதுந்துபி முழங்கியது. புகழ்ச்சோழநாயனர் சிவபெருமான் திருவடி நிழலைச் சார்ந்து பேரின்பமுற்ருர்.

## விளக்கம்

**உறையூர்**

திருச்சிராப்பள்ளிக்கு அருகேயுள்ள நகரம். உறந்தை, கோழியூர் முதலிய பெயர்களையுடையது. சோழர்கள் தமக்கு உறை ஊராகக் கொண்டதனல் உறையூர் எனப்பட்டது. ஆங்கு ஒரு சமயம் கோழி யானையைத் துரத்தி வென்றதனல் கோழியூர் எனப்படும். சோழர்களுடைய தலைநகரமாக மிகமிகச் சீரும் சிறப்பும் பெற்று விளங்கிய நன்மையுடைய தொன்மை யான நகரம்.

**புகழ்ச் சோழர்**

இவர் தலைசிறந்த அடியார் பக்தி பூண்டவர். ஒப்புயர்

வற்ற வீரருமாவார். சிவாலயங்களைப் புதுப்பித்தும், திருத் தொண்டுகள் அடியார்களைக்கொண்டுசெய்வித்தும் இன்புறுவார்.

பிறைவளருஞ் செஞ்சடையார் பேணுசிவா லயமெல்லாம்
நிறைபெரும்பூ சனைவிளங்க நீடுதிருத் தொண்டர்தமைக்
குறையிரந்து வேண்டுவன குறிப்பின்வழி கொடுத்தருளி
முறைபுரிந்து திருநீற்று முதல் நெறியே பாலிப்பார்.

இவர் மன்னர் அனைவரும் கப்பங்கட்டி வணங்கிப் பணி புரியச் சக்கரவர்த்தியாக விளங்கினர். "முறை புரியுந் தனித் திகிரி முறை நில்லா முரணரசர் உறை அரணம் உளவாகில் தெரிந்துரைப்பீர்" என்று தமது அமைச்சரை நோக்கி வினவி, "அதிகன் என்பான் ஒருவன் மலையரணுடன் இருக்கின்றான். அவன் திறை தருவதில்லை" என்று அமைச்சர் கூறலும், "அவனை வென்றுவாருங்கள்" என்று உடனே படைகளுடன் அமைச்சரை ஏவியபடியால் இவருடைய தலைமையும் நிலைமை யும் விளங்குகின்றன.

இத்தனை வீரவுணர்வுடைய இவர், தமது சேனைகள் கொணர்ந்த தலைகள் பலவற்றுள் ஒருதலையில் சடையிருக்கக் கண்டவுடன் அடியார் ஒருவர் போர்புரிந்து மாண்டார் எனக் கருதி இவர் அடைந்த துன்பத்திற்கு எல்லையில்லை. "அந்தோ! கெட்டேன். யாரோ ஒரு அடியார் தனது கடன் முடிக்கும் பொருட்டுப் போரிட்டார் போலும். இவர் மாள்வதற்கு நான் காரணனாக இருந்தேனே. இதைக் கண்டும் நான் உலகை யாண்டு உயிர்வாழ்ந்து இன்புறலாமோ? மாண்டு ஒழிவேன்" என்று துணிந்ததனால் இவருக்கு அடியவரிடம் உள்ள அன்பின் மிகுதி புலப்படுகின்றது.

தார்தாங்கிக் கடன்முடித்த சடைதாங்கும் திருமுடியார்
நீர்தாங்கும் சடைப்பெருமான் நெறிதாங் கண்டவரானார்
சீர்தாங்கும் இவர்வேணிச் சிரந்தாங்கி வரக்கண்டும்
பார்தாங்க இருந்தேனோ பழிதாங்கு வேன் என்றார்.

இவர் தீவளர்ப்பித்து அதில் முழுகி மாளத் தொடங்கும் போது உடல் முழுவதும் திருநீறு பூசிக்கொண்டார் என்ப தையும் சிந்திக்க. "பொய் மாற்றும் திருநீற்றுப் புனை கோலத் தினிற் பொலிந்தார்" என்று வரும் அமுதவாக்காலறிக.

அன்றியும் திருநீற்றினைப் பூசி, அத்தலையை ஒரு பொன் மணித்தட்டில் வைத்து சென்னிமிசை ஏந்தி ஐந்தெழுத் தோதி நெருப்புக் குண்டத்தை வலம் வந்து அதில் மகிழ்ச்சி யுடன் இறங்கினர்.

கண்ட சடைச்சிரத்தினையோர் கனகமணிக் கலத்தேந்திக்
கொண்டுதிரு முடித்தாங்கிக் குலவும் எரிவலங்கொள்வார்
அண்டர்பிரான் திருநாமத் தஞ்செழுத்தும் எடுத்தோதி
மண்டெழுற் பிழம்பினிடை மகிழ்ந்தருளி உள்புக்கார்.

இதனால் இந் நாயனர் அழியாத சிவபதமடைந்து ஆராவமுதப் பேரின்ப மெய்தினர்.

உ

முருகா

# கற்பு

## காமாட்சி

### கடுகால் விளைந்த கதை

"கடுகளவு கோபம் மலையளவு வேதனையைத் தரும். ஆதலால் கோபதாபத்தை யடக்கி சாந்தமுடன் வாழ்வதே இல்லற இன்பம். இதை இந்த வரலாறு விளக்குகின்றது"

குடும்பத்திலே எத்தனைபேரிருந்தாலும் காமாட்சிக்குத் தன்கணவனுக்குத் தானே அன்னம்படைத்தால்தான் திருப்தி. "இன்னங் கொஞ்சம் சாப்பிடுங்கள். வரவர இளைத்துப் போகின்றீரே!" என்று இனிய வசனங்களைச் சொல்லிக்கொண்டே படைப்பாள். அவளுக்குக் கணவனிடத்தில் அளவற்ற அன்பு. கணவனுர் அலுவலகத்திற்குப் போகும்போது தன் உயிரே வெளிப்பட்டுப் போவதுபோல் இருக்கும். கணவனுர் வருகின்ருரா என்று அடிக்கடி வாசலில் வந்து பார்ப்பாள். மாலை அவன் வருவதற்குள் இனிய சிற்றுண்டிகள் தயாரித்து வைப்பாள். தன் கணவனுர் நண்பர்களுடன் வந்தால் அவர்களை நன்கு உபசரித்து உணவுகள் தருவாள். நண்பர்கள் காமாட்சியின் கற்புநெறியையும் கணவனிடம் ஒழுகும் கடமைப் பண்பையுங் கண்டு மனதார மகிழ்ந்து வாயாரவாழ்த்துவார்கள். கணவனுருடைய உடன் பிறந்த தம்பி, தங்கை முதலியவர்கள் வந்தபோதும் அகமும் முகமும் மலர்ந்து ராஜோபசாரஞ் செய்வாள்.

காமாட்சியின் கணவன் **சகாதேவன்** சென்னையிலே கொத்தவால்சாவடியிலே பாக்கு மண்டி வைத்துக்கொண்டிருந்தான். இரண்டு மூன்று ஆட்களை வைத்துக்கொண்டு அதிக விரிவாகவும், அதிக சுருக்கமாகவும் இல்லாமல் நடுத்தரமாக வியாபாரத்தைப் பார்த்துக்கொண்டிருந்தான்.

**ஆக்கம் அதர்வினுய்ச் செல்லும் அசைவிலா**
**ஊக்கம் உடையான் உழை.**

(தளர்வில்லாத ஊக்கம் உடையானிடத்துச் செல்வம் வழிகேட்டுக்கொண்டுசென்று வாழும்) என்ற திருவள்ளுவரின் திருவாக்கின்படி ஊக்கம் உடைய சகாதேவனிடம் தனலட்சுமியின் கடாட்சம் உண்டாகியது. தம்புசெட்டித் தெருவிலே ஒரு வீடு சொந்தமாக வாங்கினுன். மனைவிக்குப் போதுமான அளவில் அணிகலன்களை வாங்கிக் கொடுத்தான். பட்டாடைகளும் வெள்ளிப்பாத்திரங்களும்வாங்கித்தந்தான். அவளுடைய நற்குணங்களுக்குத் தக்கவாறு மேலும் மேலும் வியாபாரம்

வளர்ச்சியடைந்தது. கடையிலிருந்து வேலை பார்ப்பவர்கட்கும் போதுமான சம்பளந் தந்தான். தீபாவளி சங்கராந்தி பண்டிகைகளில் ஒருமாத சம்பளம் இனம் தருவான். நல்ல நாள்களில் தன்னிடம் வேலை பார்க்கிறவர்கட்குத் தன் வீட்டில் உயர்ந்த உணவு தந்து உபசரிப்பான். அதனால் முதலாளிக்கும் தொழிலாளிகட்கும் பரஸ்பரம் அன்பு உண்டாயிற்று.

ஆனகுடும்பத்திற்கு ஆண் ஒன்று பெண் ஒன்று என்ற பழமொழிப்படி அவனுக்கு பெண்குழந்தையும் ஆண்குழந்தையும் பிறந்தது. இரண்டு செல்வக் குழந்தைகளும் சீரும் சிறப்புமாக வளர்ந்து வந்தார்கள்.

மகளுக்கு வயது பத்து; மகனுக்கு வயது ஏழு. செந்திருமகளும் சந்திரனும் போல் இனிது உலாவி தாய்தந்தையர்க்கு உவகையை ஊட்டினர்கள். குழந்தைகள் பேசும் மழலை மொழிகளைக் கேட்டும், அவர்கள் விளையாடல்களைக் கண்டும் தாயும் தந்தையும் இன்பக்கடலில் முழுகினர்கள்.

திருக் கார்த்திகை யன்று சகாதேவன் நீராடி முருகப் பெருமானுடைய படத்திற்குச் சிறப்பாக வழிபாடு செய்தான். அன்று பொழுது சாய்ந்தபின் விளக்கைத் தெரிசித்த பின் உணவு கொள்வது நியதி யாதலின் கணவனுக்குப் பாலும் பழமும் கொடுத்தாள் காமாட்சி. பிள்ளைகளுக்குப் பட்சணம் செய்துகொடுத்தாள்.

மாலை 5மணிக்கு மேல் காமாட்சி நீராடி சமையல் செய்தாள். வீடுநிரம்ப அகல்களைவைத்து எண்ணெயும் திரியும் இட்டாள். ஆறுமணிக்கு விளக்குகள் ஏற்றப்பட்டன. உணவுகளை முருகன் திருமுன் வைத்து நிவேதித்தாள்.

சகாதேவன் சாப்பிடுவதற்குவந்து வழக்கமாக அமர்கின்ற இடத்தில் அமர்ந்தான். பிள்ளைகளும் அருகில் அமர்ந்தார்கள். காமாட்சி அன்புடன் கறிகளைப் படைத்து அன்னம் படைத்தாள். பருப்பும் நெய்யும் படைத்தாள். வாழைக்காய் பொரியலில் கடுகு அதிகமாக இருந்தது.

“காமாட்சி! இது என்ன? பொறியல் ஒரே கடுகுமயமாக இருக்கின்றது. கொஞ்சமாகப் போட்டுத் தாளிதஞ் செய்யக் கூடாதா?”

“கடுகு கொஞ்சம் அதிகமாகப் போட்டதனுலே என்ன குடிமுழுகிவிட்டது? கடுகுதாளிதம் நல்ல வாசனையாக இருக்குமே? சத்தம் போடாமல் சாப்பிடும்”

“ஏண்டி! உனக்கென்ன ஞானமிருக்கின்றதா? இல்லையா? நமது உடம்பிலுள்ள உதிரத்தில் ஒரு கடுகு ஒரு குண்டுமணியளவு உதிரத்தைக் குடிக்கும். கடுகு நயமென்று அள்ளிப்

போட்டுவிட்டாயே. எந்த மருந்துக்கும் நல்லெண்ணெய் கடுகு தாளிதம் கூடாது என்று கூறுவார்களே. நீ கேட்டதில்லையா? சுத்த அசடாக இருக்கின்றாயே. அறிவில்லாதவளே!''

“அசட்டு மனைவியை ஏன் கல்யாணம் செய்துகொண்டீர்? நல்ல புத்திசாலியான ஒருத்தியைத் தேடி தாலி கட்டியிருக்கலாமே? என்னமோ நாலு கடுகு கூடிவிட்டதற்கு இத்தனை பிரமாதம் பண்ணுகின்றீரே? கடுகைத் தள்ளிவிட்டு சாப்பிடலாமல்லவா? பெரிய கார்த்திகை யதுவும் என்னைத் திட்டுகின்றீரே. இதுக்கா நீர் உபவாச மிருந்தீர். காலையிலிருந்து வீடு வாசல் மெழுகிக் கோலம் போட்டு, பாத்திரங் கழுவி, பம்பரமாகச்சுழன்று சமையல் செய்துவைத்து விளக்கேற்றி வேலை செய்ததற்கு இப்படி எரிந்துவிழுவதுதான் பிரதியுபகாரமா?''

“அடி எருமையே! என்ன வாயில் ஈ நுழைவது கூடத் தெரியாமல் பேசுகின்றாயே! உனக்கு தான் என்ற மமதை ஏறிவிட்டாப் போல் இருக்கின்றதே. உனக்கு அளவுக்குமேலே புடவையும் நகையும் வாங்கிக்கொடுத்ததாலே வந்த திமிர். வாயை மூடிக்கொண்டிரு. எனக்குக் கோபம் வந்தால் மண்டையை உடைத்துவிடுவேன்.''

“இப்படியெல்லாம் பேசாதீர்! புடவையும் நகையும் நான் செத்தால் என் கூடவைத்துப் புதைத்துவிடுவீர்களோ? நல்ல நாள் என்று கூட பாராமல் இப்படிப் பேசுகின்றீர். எனக்குத் தெரிஞ்சதைத்தானே நான் சமைப்பேன். உமக்கு இஷ்டமில்லையானால் ஒரு வேலைக்காரியைப் போட்டு சமைத்துக் கொள்ளுங்கள். கடுகு மிஞ்சிப்போனதற்கு கடு கடு என்றும் வெடு வெடு என்றும் பேசுவதுதான் ஒழுங்குபோலும்? நீங்கள் பேசுவதைக் கேட்டால் அக்கம்பக்கம் சிரிக்கும். எனக்கு ஒன்றும் மமதை ஏறவில்லை. இந்த நகையை நீரே போட்டுக்கொள்ளும். ஆனைக்கும் அடிசருக்கும் என்பார்கள். என்னமோ கொஞ்சம் கை மிஞ்சிவிட்டது. கடுகுக்காகவா இந்தக் கோபம்? உம்முடன் பேச என்னாலாகாது; கையிலே காசுள்ளபோது ஏன் ஆளைப் போட்டு சமைக்கக் கூடாது? கூழுக்கும் ஆசை; மீசைக்கும் ஆசை. காசும் செலவழிக்கக் கூடாது. வேலையும் ஆகணும். இனி என்னால் சமைக்க முடியாது. கண்டிப்பாய் சொல்லிவிட்டேன்.

“மூதேவி! வாயைமூடு. நான் நூறுபேரை வைத்து சமைத்துச் சாப்பிடுவேன். சமைக்காத உனக்கு இங்கென்னவேலை? எங்காவது தொலைந்துபோ'' என்று சகாதேவன் உருத்ராகாரமாகப் பேசிவிட்டு, பாதி சாப்பாட்டிலே எழுந்து கைகழுவிக் கொண்டு பளீர் என்று வெளியே போய்விட்டான்.

சகாதேவன் போனபிறகு காமாட்சிகுத் துக்கம் ஒருபக்கம். கோபம் ஒருபக்கம். அன்றுமுழுதும் பட்டினியாக இருந்தவள்,

வேலை செய்த அயர்ச்சி ஒருபுறம். தாய் தந்தைகள் போட்ட இந்த வாய்ச்சண்டையைக் கேட்டு குழந்தைகள் இருவரும் அப்படியே சித்திரச்சிலை போல் திகைத்துவிட்டார்கள். ஒரு நாளும் அவர்கள் இப்படி சண்டை போட்டதே கிடையாது. அன்றுதான் என்னமோ விஷக்கடிவேளையாக இருவரும் இப்படி வாய்மிஞ்சிவிட்டார்கள்.

காமாட்சியின் கண்களில் தாரை தாரையாகக் கண்ணீர் வடிந்தது. அவளுக்கு என்னமோ நெஞ்சு வெடித்து விடும் போல் இருந்தது; தலை சுற்றியது. மனதிலே பெரிய சிந்தனைப் புயல் வீசியது. தான் பெரிய தவறு செய்து விட்டதாக மனச்சாட்சி அவளை வாட்டியது.

அந்தவேளையில் அயனாவரத்தில் இருக்கின்ற அவள் தமையன் வந்து, "அம்மா! உன் அண்ணிக்குப் பிரசவ சமயம். நான் அடுத்த மாதம் என்று எண்ணினேன். திடீர் என்று பிரசவ வேதனைப் படுகின்றாள். அவர் எங்கே? சீக்கிரம் நீ புறப்பட்டு வரவேணும். ஆபத்து நேரம்" என்று கூறியழைத்தான். காமாட்சிக்கு ஒன்றும்புரியவில்லை. மறுவார்த்தை சொல்லாமல் புறப்பட்டாள். மூத்தமகள் விமலாவை நோக்கி, "விமலா! உங்கப்பாவந்தால் நான் அயனாவரம் போனதாகச் சொல்" என்று கூறிவிட்டு ஒரு குதிரை வண்டி வைத்துக்கொண்டு அண்ணனுடன் அயனாவரம்வந்து சேர்ந்தாள். இவள் அங்கு போய் சேர்வதற்குள் அவளுக்கு இடுப்புவலி நின்றுவிட்டது. காமாட்சிக்கு மனதில் சாந்தியில்லை. அண்ணன் வீட்டில் இருக்கும் அவளுக்கு மனதில் மாற்றமுடியாத வேதனை. பற்பல நினைத்து சமாதானம் இன்றி துடிதுடித்தாள். ஒவ்வொருநாளும் ஒரு யுகமாகக் கழிந்தது. தலையில் ஒரு பெரிய சுமை யிருப்பது போல் தோன்றியது. மகிழ்ச்சியாக வாழ்ந்த அவளுக்குத் திடீர் என்று இந்த மாறுதல் ஏற்பட்டுவிட்டது.

அங்கே சகாதேவன் சிறிது நேரம் மனச்சாந்தியில்லாமல் திரிந்துவிட்டு வீட்டுக்கு வந்தான். குழந்தை விமலாவும் மகன் நாகராஜனும் அழுது கொண்டிருந்தார்கள். "விமலா! அம்மா எங்கே?" என்று கேட்டான். விமலா, "அப்பா! நீங்கள் போன பிறகு அம்மா அழுது கொண்டேயிருந்தார்கள். மாமா வந்தார்கள். மாமிக்கு உடம்பு நன்றாக இல்லையாம். அவசரமாக அம்மாவும் மாமாவும் அயனாவரம் போனார்கள்" என்றாள்.

அவன் உள்ளத்திலும் ஒரு பெரிய சிந்தனை அலைவீசியது. படுக்கையில் படுத்தான்; தூக்கம் வந்தால்தானே. இப்படியும் அப்படியுமாகப் புரண்டுகொண்டே யிருந்தான். பலப்பல நினைந்தான். பொழுது விடிந்தது. எழுந்தான். வீடு வெறிச்சென்றிருந்தது. மனைவி தான் வருகின்றவரை பொறுத்திருந்து தன்னுடன் சொல்லாமல் போனதை நினைத்து மனம் புழுங்கினான்.

தான் வீட்டைவிட்டுப் போ என்று சொல்லிய சொல்லை நினைந்தான். நாம் கடிந்து பேசியதால்தான் மனம் உடைந்து போய் விட்டாள். ஒரு நாளும் என்னுடன் எதிர்த்துப் பேசாதவள். என்னமோ நேற்று இப்படி நிகழ்ந்துவிட்டது. குடும்ப காரியத்தை மாடுபோல் உழைத்துச் செய்கின்ற அவளை நாம் வைதது சரியல்ல. சிதேவி போன்ற அவள் நம்ம வீட்டுக்கு வந்தது முதல் செல்வமும் சீரும் சேர்ந்தன. அவளை நாம் மூதேவி என்று திட்டினேம். அப்படியே நாம் திட்டினாலும் அவள் பொறுத்துப் போகக்கூடாதா?......'' என்று என்ன என்னமோ எண்ணினன். "விமலா! அம்மா எப்பொழுது வருவதாகச் சொன்னள்'' என்றான். "ஒன்றும் சொல்லவில்லை யப்பா'' என்றாள் விமலா. காலை மணி எட்டு. பிள்ளைகளை ஓட்டலுக்கு அழைத்துப்போய் பலகாரம் வாங்கித்தந்தான். கடைக்குப் போனான். கடையில் வெறும் உடம்புதான் இருந்தது. இப்படி ஐந்து ஆறுநாள் ஓட்டலிலிருந்து வரவழைத்துச் சாப்பிட்டான். ஒன்றும் சுகமாக இல்லை. ஒரு நாளைக்கு உணவில் உப்பு, ஒருநாள் வெறும் புளி, அகத்திக்கீரை; கொத்தவரங்காய். இப்படி எல்லாம் மாறுபட்ட கறிகாய்கள்.

விமலாவும் நாகராஜனும் சகாதேவனைப் பார்த்து, "அப்பா! அம்மா எப்பொழுது வருவார்கள். நீ போய் அம்மாவை அழைச்சிகிட்டுவா'' என்று அழுதுகொண்டே கேட்பார்கள். அப்போது அன்புள்ள அக்குழந்தைகளுக்கு என்ன பதில் சொல்லுவதென்றே தோன்றாமல் சகாதேவன் விழிப்பான். "நாளைக்கு வருவாள்'' "நாளைக்கு வருவாள்'' என்று கூறுவான். "என்னப்பா சும்மா நாளைக்கு நாளைக்கு என்கிறையே! அம்மா இனி வரமாட்டார்களா?'' என்றாள் விமலா. அதைக் கேட்ட சகாதேவன் கண்களில் இருமுத்துக்கள் போல் நீர்சிந்தியது. 'ம்......' என்று ஒரு பெருமூச்சு விட்டான். பதில் சொல்லாமல் எழுந்துபோய்விட்டான். சுருங்கச் சொன்னல் ஒரு பிரசவப் பெண் அடையும் வேதனையை யடைந்தான்.

தெருவில் ஏதாவது வண்டிபோனல் மனைவிதான் வருகின்றாளா என்று எட்டிப்பார்ப்பான். வேலைக்காரி அடுப்பு எரியவில்லையானல் எண்ணெயை அடுப்பில் விடுவாள். பாலைக் குடித்துவிட்டுத் தண்ணீரை விட்டுக் காய்ச்சிவைப்பாள். பண்டங்களைக் கண்டபடி சிந்துவாள். அதனல் குடும்பச் செலவு முன்னையவிட அதிகமாகியது. ஆனலும் திருப்தியில்லை. பூங்காவனமாக இருந்தவாழ்வு பாலைவனம்போல் ஆய்விட்டது. போய் மனைவியை அழைத்து வரலாமா? என்று எண்ணுவான். சொல்லாமல் போனவளை நாமே போய் அழைத்தால் சட்டை கெட்டுவிடும். அவளாகவே வரட்டும் என்று எண்ணுவான். நம்முடைய மனைவியை நாம் போய் அழைத்தால்

என்ன குற்றம்? என்றும் எண்ணுவான். குழந்தைகளைக்கூடக் கவனிக்காமல் அவள் எப்படித்தான் அங்கு இருக்கின்றாளோ? என்மீது வைத்திருந்த அபாரமான அன்பை மறந்துவிட்டாளா? அப்படி மறக்கக்கூடியவளல்லவே! ஒருநாள்கூட என்னுடன் எதிர்த்துப் பேசாத உத்தமி. என்னமோ அன்று நான் கோபமாக ஏசியதனால் பேசிவிட்டாள். அந்த ஒரு குற்றத்தை நாம் பொறுப்பதுதான் நியாயம் என்று நினைப்பான்.

அயனாவரத்தில் காமாட்சிக்குக் கணவனையும் குழந்தைகளையும் பிரிந்து இருப்பது நரகவாழ்வாக இருந்தது. "அற்பவிஷயத்திற்காக நாம் அவருடன் எதிர்த்துப் பேசியது என்ன இருந்தாலும் நம் மீது குற்றந்தான். கடுகளவும் கோபிக்காத அவரை நாம் அன்று மனம் நோவப் பேசினேமே. அவர் அன்று உபவாசமிருந்ததனாலோ வேறு என்ன காரணத்தாலோ கோபித்துக்கொண்டார். கணவனாது கோபதாபத்தைப் பொறுப்பதுதானே கற்புடையார் கடன். கணவனார் வருகின்ற வரை காத்திருந்து அவரிடம் விடைபெறாமல் வந்தது பெரிய குற்றம். அப்படியே நான் குற்றம் புரிந்தாலும் அவராவது பொறுத்துவந்து நம்மை அழைத்துப் போகக்கூடாதா? அவருக்கும் பிடிவாதம். குழந்தைகள் என்னமா அழுகின்றார்களோ? சாப்பாட்டுக்கு என்ன செய்கின்றார்களோ? ஒருவேளை கோபத்தாலே அழைக்காமலேயே இருந்துவிடுவாரோ? நானே போகலாமா? அப்படிப் போனால் என்ன குற்றம்? நதி கடலை நோக்கிப் போவது போல் பெண்கள் கணவனை நாடிப் போவது இயல்புதானே. எதற்கும் சிறிது பொறுப்போம். நாளை மறுநாளில் அவர் வந்தாலும் வரக்கூடும்" என்று பலவாறு சிந்தித்தாள். அவளால் ஒரு முடிவுக்கும் வர முடியவில்லை. தேனில் வீழ்ந்த ஈயைப்போல் தத்தளித்தாள். வந்து கணவன் அழைப்பது போலவும் குழந்தைகள் தன்னைக் கண்டு அழுவது போலவும் கனக்காண்பாள்.

தம்புசெட்டித் தெருவில் ஒருநாள் காலை. சாய்வு நாற்காலியில் சாய்ந்து, சகாதேவன் ஏதோ ஆழ்ந்த சிந்தனையில் இருந்தான். "தபால்" என்ற சத்தம் கேட்டது. "அம்மா! விமலா! போய் தபால் வாங்கிவா" என்றான். விமலா தபால் வாங்கச் சென்றாள். "நான்தான் வாங்கிவருவேன்" என்று அவளுக்கு முன் ஓடினான் நாகராஜன். கடிதத்தை வாங்கிவந்து தந்தையிடம் தந்தான். அதனை வாங்கினான் சகாதேவன். அதில் அனுப்புதல் என்ற இடத்தில் "காமாட்சி. அயனாவரம்" என்று எழுதியிருந்தது. உள்ளத்தில் ஒரு உணர்ச்சியும் காதலும் எழுந்தன. அவசரம் அவசரமாகக் கவரை உடைத்துப் படிக்கலுற்றான்.

அயனவரம்
நந்தன தை-15.

கருணைநிறைந்த காதலரே!

வணக்கம் பலகோடி.

அன்று என் தமையன் மனைவியின் பிரசவம் என்பது குறித்து அவசரமாகச் சொல்லாமல் வந்தேன். அதைக் குறித்துத் தாங்கள் மன்னிக்கவேண்டும்.

தாங்கள் அன்று கடுகு அதிகம் போடக்கூடாது என்று கண்டித்தபோது, நான் தங்களுடன் எதிர்த்துப் பேசியது பற்றி என் உள்ளமே என்னை வாட்டுகின்றது. நான் செய்த தவறை நினைந்து வருந்துகின்றேன். தங்களையும் குழந்தைகளையும் பிரிந்த ஒவ்வொருநாளும் ஒவ்வொரு யுகமாக நரக வேதனை யடைகின்றேன். இத் தண்டனையே போதும். இனி நான் அப்படித் தவருக நடக்கமாட்டேன். இந்த முறை என்னை மன்னித்து அருள்புரியுமாறு வேண்டுகின்றேன். நாளை மாலை நான் வருவேன். குழந்தைகள் எதிரில் என்னை வையாமலும் வேறு ஒன்றும் அதைப்பற்றிப் பேசாமலும் என்னை ஏற்றுக் கொள்ளுமாறு பலகாலும் பணிந்து கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இப்படிக்கு
தங்கள் அடிமை,
காமாட்சி.

இதைப் படித்து சகாதேவன் பெருமூச்சுவிட்டான். அவன் கண்களில் நீர் வடிந்தது. அதை மெல்லத் துடைத்துக் கொண்டான்.

அயனவரத்தில் அதே சமயத்தில் ஒரு கடிதத்தைக் கொண்டுபோய் தபால்காரன் தந்தான். அதை வாங்கிய தமையன் தன் தங்கையிடம் கொடுத்தான். அதை வாங்கிப் பிரித்து படிக்கலானாள்.

தம்பு செட்டி தெரு,
நந்தன தை-15.

அன்புள்ள காமாட்சிக்கு ஆசீர்வாதம். நலம்.

கடுகுக்காக அன்று நான் உன் மனம் நோவப் பேசியதைக் குறித்து நான் வருத்தப்படுகின்றேன். நீ ஒரு நாளும் என் மனம் நோவ நடந்ததேயில்லை. உத்தம குணம் படைத்த உன்னைப் பிரிந்த நாள் முதல் என்மனதில் சாந்தியில்லை. கணவனுகிய நான் அகாரணமாகக் கோபித்தாலும் நீ பொறுக்

கக் கூடாதா? பொறுமை மிக்க பூமியை பூமாதேவி என்று பெண்ணைச் சொல்லுகின்றார்களே. உன் குழந்தைகள் உன்னைக் காணாது வருந்தி வாடுகின்றார்கள். மக்கள் வாழ்வு சிலகாலந்தானே. நமக்குள் நாம் இப்படி பிணங்கியிருப்பது நலமன்று. நீ நாளையே புறப்பட்டு வருவாயாக. நீ வந்தால் அன்று நடந்த பூசலைப்பற்றி நான் சத்தியமாக ஒன்றும் கேட்க மாட்டேன். உன் வரவை நாளை எதிர்பார்ப்பேன்.

இப்படிக்கு
உன்னிடம் அன்புள்ள
சகாதேவன்

இதைப்படிக்கும் போதே அவள் கண்களிலிருந்து தாரை தாரையாக நீர் சிந்தியது. நேற்று நாம் கடிதம் எழுதிய அதே நேரத்தில் அவரும் கடிதம் எழுதியிருக்கின்றார். இனி இங்கே அரைக்கணமும் தாமதிக்கக் கூடாது. என்று எண்ணினாள். கணவனுருக்கும் குழந்தைகளுக்கும் இனிய பட்சணங்களைத் தயாரித்துக் கொண்டாள். அண்ணனிடமும் அண்ணியிடமும் அன்பு நிறைந்த விடை பெற்றுக் கொண்டாள். பிறந்த குழைந்தைக்கு முத்தங் கொடுத்தாள். ஒரு குதிரை வண்டியை அமைத்துக் கொண்டு புறப்பட்டாள். மாலை மூன்று மணிக்குத் தம்பு செட்டித் தெருவுக்கு வந்தாள். வீட்டில் நுழைந்தாள். குழந்தைகள் ஓடிவந்து 'அம்மா' என்று அவள் காலைக் கட்டிக் கொண்டார்கள். சகாதேவன் அவள் கையிலிருந்த மூட்டையை வாங்கிக் கூடத்தில் வைத்தான். "காப்பி சாப்பிடு" என்று தன் கையால் அவளுக்குக் காப்பியைக் கொடுத்தான். அவள் அவனைக் கனிந்த பார்வையினால் பார்த்தாள். அந்தப் பார்வை மன்னிப்பை வேண்டி நிற்பது போல் இருந்தது. அவன் அவளை ஆதரவோடு பார்த்தான். அப் பார்வை மன்னித்து விட்டேன் என்று பதில் கூறியது போல் இருந்தது.

பழையபடி கணவனும் மனைவியும் அன்புடன் மனங்கலந்து வாழ்ந்தார்கள். பிறகு அவர்களிடம் ஒப்பற்ற உள்ளன்பு மலர்ந்தது.

---

## ஸௌராஷ்ட்ர நீதிஸம்பு

**123.** ஸர்வ ஆத்ம ஐக்கிய நிஷ்டைப்படி எவன் உள்ளன்புடன் ஸர்வ பிராணிகளுடைய உயிர்களைத் தன் சொந்த உயிர் போல் பாவிக்கின்றானோ அவனே புனித ஆத்மா. கடவுள் அவனுக்கு எங்கும் துணை நிற்பார்.

**124.** கண்களால் காணும் நல்லவைகளையும் காதுகளால் கேட்கும் சத்விஷயங்களையும் சபையில்;எடுத்துச் சொல்வதினால் அவர்களின் தர்மமும் சம்பத்தும் குறைந்து விடாது.

2-45

உ
முருகா

# சுகாதாரம்

அன்பர்கள் பெறுதற்கரிய இம்மனித உடம்புடன் நோயின்றி நலமாக நெடு நாள் வாழ விரும்பினல், அடியில் கண்ட நெறிகளைக் கடைபிடித்து ஒழுகவும்.

1. நாள்தோறும் அதிகாலை ஐந்து மணிக்கு உறக்கத்தை விட்டு எழுக.

2. கண் விழித்து எழுந்த உடன் படுக்கையினருகில் மூடி வைத்துள்ள தண்ணீரால் வாயையும் முகத்தையும் கழுவுக.

3. சல மலம் கழிக்க.

4. மெல்லிய பற்குச்சியினுலாவது, துவர்ப்புள்ள பற்பொடியினுலாவது பல்லை விளக்கி, பற்களின் ஈறுகளை வெறும் விரலால் அழுந்தத் தேய்த்து வாயை நன்கு கொப்புளித்து கை கால் முகம் இவைகளைத் தூய்மை செய்க.

5. பல் விளக்கினவுடன் வெறும் வயிற்றில் காலை மாலை காற்றோட்டமுள்ள தனி இடத்திலிருந்து, உடம்புக்கும் வயதுக்கும் தக்கபடி தவருது சிறிது நேரம் பிராணுயாமம் செய்து, அவரவர்கள் வழிபடு கடவுளை இதயத்தில் எழுந்தருளப் புரிந்து மூலமந்திரத்தை உதடு அசையாமல் மனதால் நினைத்து தியானம் புரிக.

6. அவரவர் வயது சக்திக்கு ஏற்றவாறு உடற்பயிற்சி அல்லது ஆசனப் பயிற்சி செய்க.

7. ஆற்று நீர், குளநீர், கிணற்றுநீர், குழாய்நீர், இவைககளில் அவரவர்கள் அநுகூலத்திற்குத் தக்கவாறு நீரில் மூல மந்திரம் எழுதி அதனைச் சிவகங்கையாகப் பாவித்து மன வாக்குக் காயங்களால் அறியாமையால் செய்த பாவங்கள் விலகுமாறு தியானித்து நீராடுக. தலைஒழித்து கழுத்துடன் நீராடுவது கூடாது. தோய்த்துலர்ந்த தூய உடைகளை உடுக்க.

8. அன்புடன் இறைவனை நினைத்து வழிபடுக. அருள் நூல் களைப் பாராயணம் செய்க.

9. காலையில் காபி, தேநீர், கோகோ, ஓவல்டின், முதலியவை களைக் குடியாமல், பழஞ்சோறு, கூழ், கஞ்சி, எளிதில் செமிக்கும் இட்டலி போன்ற உணவுகளில் ஒன்று சிறிது அருந்துக.

10. அவரவர்கள் தொழில்களில் ஈடுபட்டபின் உச்சி நேரத்தில் அமைதியுடன் உணவு செய்க. நாடோறும் கீரையை

சமைத்து உண்டல் நலம். தவிடு போகாத அரிசியை கஞ்சிவடிக்காமல் பதமாக வேகவைத்து உண்க. உண்ணும் பொழுது நன்றாக மென்று உண்க.

"நொறுங்கத் தின்றவன் நூறு வயது இருப்பான்"

11. எக்காரணத்தை முன்னிட்டும் பசியில்லாத பொழுது உண்ணாதிருக்க.

12. பசித்தபின் புசிக்கும் பொழுது தண்ணீர் குடிக்கவும் சுவாசம் நன்கு போய்வரவும் சிறிது காலி இடம் இருக்கும் படி உணவு செய்க.

13. உணவு உண்ணும்பொழுது இடையிடையே தண்ணீர் குடிக்கக் கூடாது. உண்டு முடிந்தபின் தண்ணீர் பருகுக.

14. பகலில் உண்டபின் ஏதாவது இனிய கனிகளை உண்க. வாழைப் பழத்தில் நல்ல சத்துக்கள் இருப்பதால் எளிதில் கிடைப்பதால் அதனை நியதியாக உண்க. சிறிது நேரம் ஓய்வாக இருக்க.

15. ருசிக்காக உண்ணாமல் பசிக்காக உண்ணுக. சத்துவ குணங்களைத் தரும் உணவுகளையே உண்க. புலால் உணவு உடலுக்கும் உணர்வுக்கும் கேடுசெய்யும்.

16. குடும்பமாய் வாழும் உள்ளூர்வாசிகள் சிற்றுண்டிச்சாலை (காபிகடை) களுக்குச் சென்று உண்ணாதிருக்க.

17. ஒரு உணவுக்கும் மறு உணவுக்கும் இடையே அமுதமாயினும் அருந்தக்கூடாது. அவசியமாயின் தண்ணீர் பருகுக.

18. புகையிலை, பொடி, சுருட்டு, பீடி, சிகரெட்டு, வெற்றிலை பாக்கு இவைகளைப் பழகாதிருக்க.

19. அறிவைக் கெடுத்து மயக்கத்தைத் தரும் பானங்களை அருந்தாதிருக்க.

20. மாலையில் கை கால் முகம் இவைகளைக் கழுவி சிறிது நேரம் தனித்திருந்து மனதை ஒருமுகப்படுத்தி தியானம் செய்க.

21. காலை மாலைகளில் ஒன்று அல்லது இரண்டு மைல் உலாவி வருக.

22. இரவு ஒன்பது மணிக்குள் எளிதில் செமிக்கக் கூடிய உணவை உண்க.

23. உண்டபின் ஒருமணி நேரம் அறிவுநூல்களை வாசிக்க. கண்ணையும் கருத்தையும் கெடுக்கும் சினிமா முதலியவை களைப் பார்க்காதிருக்க. அதனால் பீடி சிகரெட் புகை நமது உடலில் புகுந்து உடல் நலத்தைக் கெடுக்கும்.

24. அருந்துதல், பொருந்துதலில் மிகவும் அளவோடிருக்க.

25. ஆடவரும் மகளிரும் இறுக்கமான உடைகளை உடுக்காமல் தூய உடைகளையே உடுக்க.

26. ஆசை, கவலை, சினம், அச்சம், பகை இவைகளுக்கு மனதை அடக்கி ஆளுக.

27. மன வாக்கு காயங்களால் பிறருக்குத் தீமை செய்யாமல் நன்மையே செய்க.

28. ஆடவர் இடப்பக்கமாகவும், மகளிர் வலப்பக்கமாகவும் படுத்து உறங்குக. அதனால் ஆயுள் வளர்வதுடன் நன்ருக ஜீரணமாகும். வடக்கே தலைவைத்து படுக்கக் கூடாது. காலுக்குப் போடும் அணையைத் தலைக்குப் போடக் கூடாது. இரவு முழுவதும் இருவர் சேர்ந்து படுத்து உறங்கக் கூடாது.

29. பெண்கள் பதினெட்டு வயதுக்கு மேலும் ஆண்கள் இருபத்திரண்டு வயதுக்கு மேலும் மணஞ் செய்து கொள்க.

30. பலவகையான சிந்தனைகளைச் சிந்திக்காமலும் அமைதியுடனும் தெய்வ சிந்தையுடனும் உறங்குக.

"நோய்க்கு இடங்கொடேல்"

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்"

---

## அற மொழிகள்

25. தனம் சுருங்கினல் தானம் சுருங்குவது போன்று மன மடங்கினல் மற்றவை தாளுக அடங்கிவிடும். நீர் வற்றிய குளத்தில் அலைந்து திரிகின்ற மீன்களைக் காண முடியுமா?

26. வழிபாடு இல்லாதவர் வாழ்வு அழி பாடுதான். உணவே யில்லாத உடல் அழிந்துதானேயாகவேண்டும்?

27. இறை வழிபாடு எதற்கு என்பது, உணவு எதற்கு என்று கேட்பது போலிருக்கின்றது. மண்பாண்டம் செய்ய மண் எதற்கு என்று கேட்கலாமா?

28 ஒருவர் நமக்கு உபகாரம் செய்தால் நாம் அவருக்கு நன்றி செலுத்துவது போல் இறைவன் நாம் வாழ இந்த உலகத்தில் விளைய மண்ணும், பருக நீரும், சுவாசிக்கக் காற்றும், உலாவ சூரிய சந்திர ஒளியும், கொடுத்து உதவி யிருப்பதற்காக வாவது நன்றியான வணக்கத்தைச் செலுத்த வேண்டியது நம் நித்தியக் கடமை யல்லவா?

உ
முருகா

# ஆர்கொலோ சதுரர்?

(தகடூர். பி. சிவலிங்கன், குமாரசாமிப்பேட்டை)

இன்ப ஊற்றுப் பெருக்கெடுத்தோடும் நம் தண்டமிழ் அன்னை, தன்னுடன் எழுந்த ஆரிய மொழி மூத்து முதிர்ந்து வழக்கொழிய ஒய்ந்துவிட்ட இற்றை ஞான்றும் கன்னித் தன்மையினின்றும் சிறிதும் குன்றாது தோன்றுகின்றாள். அதனை யன்றோ நம் பேராசிரியர் சுந்திரம்பிள்ளை,

"ஆரியம்போல் உலகாற்று வழக்கொழிந்தே அழியா உன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே"

என்று கூறுகின்றார். நம் தமிழன்னை பல்லுயிர் ஈன்றும் இளங் கன்னியாகவே காட்சி யளிப்பக் காரணம் திருவள்ளுவரீந்த செந்தமிழ்ச் செல்வம், கம்பனின் கவியமுதும், சிலம்புச் செல்வம், தேவாரம், திருவாசகம் முதலிய நூற்களே கன்னித் தன்மையை வளர்ப்பன. எண்திசையும் மணம் பரப்பி, ஒளிரச் செய்தன. "தமிழ் வாழ்க!" என்போர் இப் பெருந்தமிழ் நூற்களைப் பேணியே தீர வேண்டும். இவற்றைப் படிக்காது வெறுத்து, "தமிழ் வாழ்க!" என்பவர்கள் வீண் ஆரவாரம் செய்பவர்களே அன்றி வேறொன்றில்லை,

அத்துணைச் சிறப்பு வாய்ந்த தமிழ்மொழியின் ஆரணம் (மறை) திருவாசகம் அன்றி ஒப்பற்றது வேறொன்றில்லை. இத் திருவாசகமே இறைவனை அடைய பற்றுக்கோடான நூல்.

திருவாசகம் போன்ற நூற்களைச் செவ்வனே பயின்று பொருளுணர்ந்து, அப்பொருளுடன் உணர்வைக் கலந்து, குழைத்துப் பூசுங்கள். அப்பொழுதன்றோ இறைவற்குக் கலவைச் சந்தனம் பூசியதுபோல் குளிரும். அதனால் ஒவ்வொருவரும் நாடோறும் இயலும் அளவுக்குத் திருவாசகம் மனமுருக ஓதி உய்தி பெறுவீர்களாக!

* * * *

இனி, நம் மணிவாசகப் பெருந்தகை வாணிகம் செய்யப் புறப்பட்டார். தன்னிடம் ஒரு பெரிய சுமையுடைய சரக்கு. ஒன்றுக்கும் உதவாத சரக்கு. இவர் அதை விற்கப் பல்லூர் அணைந்தார். பலரை நெருங்கினர். ஆனால் தான் நாடிய ஊதியம் கொடுத்துத் தன் சரக்கை வாங்குவார் இல்லை. அலைந் தார்; திரிந்தார்; அழுதார்; பயனொன்றில்லை. இறுதியாகத் திருப்பெருந்துறை அடைந்தார். அங்கே புகுந்த அவர் தன் சரக்கை விற்க வழிநாடினர். அங்கே ஒரு செட்டி இச்சரக்கை வாங்கவேண்டுமென்றே மிகுந்த அவாக்கொடு வானிழிந்து

போந்து கல் ஆலின் கிழ் சற்று இளைப்பாற அமர்ந்திருந்தார். அதைக்கண்ட "மணிமொழியார்" துள்ளி ஓடி அடிமிசை விழ்ந்தார். தன் சரக்கை அவரிடம் சுமத்தினர். அவருடைச் சரக்கைத் தான் பெற்றுர். என்ன அது? தன் சரக்கு உயிர், உடல் பொருள் முதலியன. அவற்றைக் கொடுத்து அவரைத் தான் பெற்றுர். தன் சரக்கோ ஒன்றுக்கும் உதவாத உளுத்த சரக்கு. இனி இதை அவர்க்கே கொடுத்து விட்டபடியால் தனக்கு அதைப்பற்றிக் கவலை இல்லையன்றோ! இதை அப்படியே இசைக்கின்றுர்.

"அன்றே என்தன் ஆவியும் உடலும் உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னை ஆட் கொண்டபோதே கொண்டிலையோ
இன்றோர் இடையூறெனக்குண்டோ எண்தோள்முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய் நானே இதற்கு நாயகமே."

இதன் பொழிப்புரை: மலைபோன்ற துன்பங்கட்கு அசையாக் குணக்குன்றே! நான் உன்னைக் கண்ட அன்றே என்னுயிரும், உடலமும், உடைமையும் உனக்கே விற்றுவிட்டேன். இனி அவை எப்படிப்போனல் எனக்கென்ன? எனக்கினிக் கவலை இல்லை. உன் பொருளானதால் நல்லதே செய்தாலும் சரி, துயரம் கொடுத்தாலும் சரி. இனி நானு அதற்குத் தலைவன்? இல்லையே" என்று ஒரு முறை சந்தித்துப் பேசி விட்டுச் சென்றுர். (இங்கு "நன்றே செய்வாய் பிழை செய்வாய்" என்பதன் ஏகாரம் பிரிநிலை ஏகாரமாய் தேற்றேகாரமாதல் காண்க.)

மற்றொருமுறை அவ்வணிகரை (சிவபெருமானை)ச் சந்திக்க நேர்ந்தது. பக்கத்தே சென்றுர். அந்த திருப்பெருந் துறைச் செட்டியை அணுகி நையாண்டி செய்ய ஆரம்பித்தார். "ஓய் வணிகரே! உமக்கென்ன வணிகம் செய்யத் தெரியுமா? தெரியாதா? அன்றையபோது கொடுத்தேனே, அந்த சரக்கு ஒன்றுக்கும் உதவாத சரக்கு. நானே அதைச் சுமந்து பல துன்பங்கட்கு ஆளாகி, "படமுடியாது இனித்துயரம் பட முடியாது அரசே பட்டதெல்லாம் போதும்" என்று உங்களிடம் ஏமாற்றி விட்டேன். ஆனல் அதற்குப் பதிலாகத் தாங்கள் தந்தது தங்களை. தங்களால் நான் குறையாத—முடிவிலாத இன்பம் பெற்றேன். அடியேன்பால் என்ன பெற்றுள்ளீர் நீவிர் இவ் வணிகத்துறையில் மிக்கத் திறமை காட்டி மதுரைத் தெருவெல்லாம் அலைந்தீரே. இப்பொழுது அடியேனல் ஏமாற்றப்பட்டு விட்டீர் அன்றோ! இவ்வணிகத் துறையில் யார் சதுரர் கூறும் ஐயா!" என்று இறைவனிடத்துக் கூறுகின்றுர். அந்த வழிந்தோடும் இன்பத் தேனை அருந்துங்கள்! இதோ! அது.

"தந்ததுன் தன்னைக் கொண்டதென் தன்னைச்
சங்கரா! ஆர்கொலோ சதுரர்?
அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றதொன் றென்பால்
சிந்தையே கோயில் கொண்டஎம் பெருமான்
திருப்பெருந் துறையுறை சிவனே!
எந்தையே! ஈசா! உடலிடம் கொண்டாய்!
யானிதற் கிலனோர்கைம் மாறே"

எனச் சதுர்பட இயற்றியுள்ளார்.

இதன் பொழிப்புரை:—

நெஞ்சகமே கோயிலாகக் கொண்ட எமது தலைவனே! திருப்பெருந்துறையமர் தேவா! எம்மனோர்க்குத் தாதையே! ஈசா! இனிமை வடிவோய்! உன்னை எனக்கு ஈந்தாய்! என்னை நீ எடுத்துக்கொண்டாய்; உன்னிடத்து யான் முடிவில்லாத இன்பம் பெற்றேன். அடியேனிடத்து நீ என்ன பெற்றுள்ளாய்! ஆகையால் யார் நமக்குள் சமர்த்தர்? என்னுடலை இடமாகக் கொண்டாய். யான் இதற்கு ஓர்கைம்மாறுக்கும் தகுதியற்றவன்.

இன்னணம் பாடியருளிய "மணி மொழி"யின் வழி நின்று உலகம் இறைவனை வழிபட்டு உய்வு பெறுவதாக!

---

## அற மொழிகள்

29. ஏழைகள் பணக்காரரை நாடிச் செல்வது போல், பணக்காரர்கள் புகழை நாடுவதைப் போல், அறியாதவர்கள் அறிஞரை நாடி அடைவதைப் போல், புலவர்கள் வள்ளலை நாடிச் செல்வதைப் போல், காதலன் காதலியை நாடிச் செல்வதைப் போல், தாயிடம் குழந்தை தாவிச் செல்வது போல், அடியார்கள் ஆண்டவனை நாடிச் செல்ல வேண்டும்.

30. மின்சார நிலையத்தில் உள்ள சக்தி கம்பிகள் வழியாக நீண்ட தூரம் பரவியுள்ளது போல் இறைவன் உயிர்கள் தோறும் பரவி விளங்குகின்றார்.

31. மின்சாரக் கம்பிகள் எங்கும் அந்த சக்தி பரவி யிருந்தாலும், விளக்குகள், விசிறிகள் மூலமாகத்தானே மின்சார சக்தியை நாம் பார்க்க முடிகின்றது. அதுபோல் ஆலயங்கள் அறநூல்கள், மகான்கள் மூலமாகத்தான் நாம் ஆண்டவனை அறிய முடிகின்றது. (அன்பன் மு. பெருமாள்)

251

உ

# தியாகமூர்த்தி (அன்பன் மு. பெருமாள்)

எல்லம்பட்டு செட்டியார் என்றால் எல்லோர்க்கும் ஏளனம். எதையும் எளிதாக நம்பமாட்டார். சந்தேகமே வடிவானவர். வட்டிக்கடையும், பெட்டிக் கடையும் வைத்து வாழ்க்கையில் முன்னேற்றங் கண்டவர். செல்வம் நிறைந்தவர் தான். ஆனால் செட்டும் கட்டுமுள்ளவர். தருமமே தெரியாதவர். கடையில் யாராவது வந்து ஒரு ரூபாவுக்கு சில்லரை கொடுங்கள் என்று கேட்டால் கொடுக்கவே மாட்டார். காரணம் எண்ணிக்கையில் கூடப் போய்விடுமோ என்ற சந்தேகந்தான். சாமான்கள் வாங்க வருபவர்கள் கொடுக்கும் பணத்தை பத்துமுறையாவது எண்ணிப் பரிசோதித்துத்தான் பெட்டியில் வைப்பார்.

ஒருநாள் உள்ளூர் திருப்பணிக் கமிட்டியார் செட்டியாரிடம் வசூலுக்காக வந்தனர். தன்னை நோக்கி வரும் அவர்களைக் கண்ட செட்டியார் உள்ளே சென்று, அறையில் ஒளிந்து கொண்டு தான் ஊரில் இல்லை என்று சொல்லுமாறு தன் மனைவியிடம் தெரிவித்தார். அவர்கள் வந்து செட்டியாரை விசாரித்தனர். அவர் ஊரில் இல்லை என்று தெரிவித்தாள் அவர் மனைவி. செட்டியார் உள்ளே சென்று மறைவதைக் கண்ட திருப்பணிக் கமிட்டி யன்பர்கள், செட்டியாரைப் பார்த்து விட்டே போவது என்று தாமதித்தனர். இதற்கிடையில் செட்டியாருக்கு இருமல் வந்துவிட்டது. வந்தவர்கள் அறியா மல் இருக்கவேண்டுமே என்று இருமலை அடக்க முயன்றார். அடக்கமுயற்சிக்க அது இன்னும் புகைந்து கொண்டு கிளம் பியது. சமாளிக்கமுடியாமல் செட்டியார் இருமிவிட்டார்.

"செட்டியாரே! வணக்கம்! என்ன இருமல் பலமாக யிருக் கின்றதே! நீங்கள் எவ்வளவோ முயன்றும் அது அடக்க முடியாமல் வந்துவிட்டது போலும்" என்று கூறிய வண்ணம் நகைத்தனர் வந்த அன்பர்கள்.

செட்டியார் தன்னை அவமானப் படுத்திவிட்ட இருமல்மீது சினந்துகொண்டு வெளியில் வந்து, "வாருங்க! வாருங்க! எல்லோரும் உட்காரலாமே! ஏது எல்லோருமாகச் சேர்ந்து ஏழையை நோக்கி வந்து விட்டீர்கள்! எனது பாக்கியமே பாக்கியம். நீங்களெல்லாம் சேர்ந்து பெரிய திருப்பணியை வசூல் செய்யாமலே ஆளுக்கொரு பங்காகப் போட்டு சொந்தப் பொறுப்பிலேயே முடிக்கப்போவதாகக் கேள்விப் பட்டேன். தங்களில் அடியேனையும் ஒரு பங்குதாரனைச் சேர்த் திருக்கலாம். ஆனால் தாங்கள் யாரும் அப்படியென்னைக் கேட்க மாட்டீர்கள் என்று எனக்குத் தெரியும். ஏனென்றால் என்னிடம் வாங்கக்கூடிய அவ்வளவு கேவலமான நிலைமையில் தங்களில் யாருமில்லை. போகட்டும் பெரிய திருப்பணியைச் செய்கின்ற தங்கள் யாவரையும் தரிசனம் செய்ததே எனது பெரும் பாக்கிய மாகும். தங்கட்கு உபசாரம் ஏதேனும் செய்யலாம் என்றால்

யாரும் ஏற்றுக்கொள்ளமாட்டீர்கள் போலிருக்கின்றது. உம்! இதுவும் என்பாக்கியம்தான். சரி சரி எல்லோரும் வந்து வெகு நேரமாயிற்று. எளியவனை மதித்து இவ்வளவுதூரம் வந்த உங்கள் யாவருக்கும் என் நமஸ்காரம். போய் வருகின்றீர்களா?'' என்று செட்டியார் மூச்சு விடாமல் அவர்களையும் பேசவிடாமல் தானே பேசி முடித்தார்.

செட்டியார் பலே சமர்த்தராயிருக்கின்ருர். இருந்தாலும் இவரை விடக்கூடாது என்று கருதி வந்த அன்பர்கள், "செட்டியாரே! தங்களிடம் திருப்பணி நன்கொடை வாங்க வந்துள்ளோம். தாங்கள் விரும்பியதைக் கொடுக்கலாம்'' என்று கேட்டனர். தாங்கள் இந்த ஊரில் பெரும் செல்வந்தராச்சே? தங்களை நம்மூர் திருப்பணியில் சேர்க்காமல்விடுவோமா'' என்றனர்.

என்ன இருந்தாலும் தாங்கள் யாவரும் சேர்ந்து இப்படி என்னை அவமானப் படுத்தலாமா? என்னை ஏளனம் செய்யாதீர்கள். நான் தருமம் செய்யாதவனு? என்னைப் பரிசோதனை செய்கின்றீர்களே! நான் ஒன்றும் உங்கள் மீது கோபம் கொள்ள வில்லை. நீங்களே திருப்பணி புண்ணியத்தை அடையுங்கள். ஒப்புதலுக்காக என்னைக் கேட்க வந்திருக்கின்றீர்கள்.

செட்டியாரே! உங்களிடம் உண்மையாகவேதான் பணம் கேட்கவந்தோம். தாங்கள்விரும்பியநன்கொடையைகொடுங்கள்.

நீங்கள் மேலும் என்னை ஏளனம் செய்யாதீர்கள்! நான் எவ்வளவு பணம் வேண்டுமானுலும் இப்பொழுதே கொடுக்கச் சித்தமாகயிருக்கின்றேன். ஆனல் நீங்கள் வாங்கிக் கொள்ள மாட்டீர்கள் என்று தானே நான் மயங்குகின்றேன். என்னிடம் நீங்கள் பணம் வாங்க விரும்பா விட்டாலும் என்னைக் கேட்பதற்காகவாவது வந்து பழியைக் கழித்துக் கொண்டீர்களே! அதுவே எனக்கு மிக்க மகிழ்ச்சியாயிருக்கின்றது. போகட்டும் தங்கள் புண்ணியத்திலாவது எனக்குப் பங்கு கொடுங்கள்.

செட்டியாரே! நாங்கள் தங்களை ஏளனம் செய்யவரவில்லை திருப்பணிக்கு நன்கொடை வாங்கவே வந்தோம்.

என்ன நான் இவ்வளவு சொல்லியும் என்னை ஏளனம் செய்வதை விடமாட்டேன் என்கின்றீர்கள். நான் தங்கள் யார்மீதும் கோபங் கொள்ளவில்லை; போய் வாருங்கள். இது போகட்டும். இனி ஏதேனும் தருமகாரியங்களைச் செய்தால் என்னை மறக்காமல் உங்களில் ஒருவனுகச் சேர்த்துகொள்ள வேண்டுகின்றேன். என்று அவர்களிடம் சாமர்த்தியமாகக் கூறி அனுப்பிவிட்டார். தன் மனைவியையும், தன் குமாரர்கள் இருவரையுங் கூப்பிட்டு "பார்த்தீர்களா என் சமர்த்தை! அவர்களை ஒன்றும் பேசமுடியாமல் தந்திரமாக அனுப்பி விட்டேன். இப்படித்தான் நீங்கள் இருவரும் சமர்த்தாகப் பிழைக்கத் தெரிந்துகொள்ள வேண்டும்'' என்று தன் பிரலாத்பைதக் கூறினர். (தொடரும்.)